# தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் ஒருங்கிணைப்பு குழு
## (NCCOEEE) தென் மண்டலம் / தமிழ்நாடு

---

07.05.2020

பெறுநர் :

ஆசிரியர்,

..........................................

பத்திரிக்கை/ தொலைகாட்சி
சென்னை.

பொருள் : மின்சார சட்ட திருத்த மசோதா 2020 – எதிர்ப்பு தெரிவித்தல் – மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டறிக்கை – வெளியிட வேண்டுதல் – தொடர்பாக .

--

சென்னை – 2, அண்ணா சாலை மின்சார வாரிய வளாகத்தில் உள்ள பொறியாளர் கழக அலுவலகத்தில் 07.05.2020 அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள் திரு.சிங்கார ரத்தின சபாபதி / தொ.மு.ச, திரு.எஸ்.எஸ்.சுப்பிரமணியன்/ சி.ஐ.டி.யு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள 17 தொழிற் சங்கங்களின் பொதுச் செயலாளர்களும் கூட்டாக விடுக்கும் அறிக்கை :

மத்திய அரசு மின்சார சட்டத் திருத்தம் 2020 ஐ எதிர் வரும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்ற எடுத்துவரும் நடவடிக்கைகளை எதிர்த்து தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் ஒருங்கிணைப்பு குழு (NCCOEEE) முடிவின்படி தமிழ்நாட்டில் ஊரடங்கு முடிந்த பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அனைத்து அலுவலகங்களிலும் கருப்பு அட்டை அணிந்து பணிக்கு செல்வது என்றும்,

தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மத்தியில் மின்சார சட்டதிருத்த மசோதாவின் பாதிப்புகளை எடுத்துக் கூற ஊரடங்கு முடிந்த பின் இயக்கங்கள் நடத்திடுவது என்றும்,

மின்சார சட்ட திருத்தம் 2020 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மின் நுகர்வோர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை பட்டியலிட்டு மக்கள் மத்தியில்

எடுத்து சென்று விவசாயிகள் மற்றும் பொது மக்களின் பேராதரவை பெறுவது என்றும்,

தமிழகத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள் (பஞ்சாயத்து உறுப்பினர் முதல் பாராளுமன்ற உறுப்பினர் வரை) அனைவரது கவனத்திற்கும் எடுத்து சென்று மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்திட கோருவது என்றும்,

தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தமிழக அரசின் சார்பாக மின்சார சட்ட திருத்த மசோதா 2020 ஐ எதிர்த்து தீர்மாணம் இயற்றி மாநில உரிமையை பாதுகாத்து மின்சார வாரியம் பொதுத்துறையிலேயே தொடர்ந்திட கோருவது என்றும் மேற்கண்ட கூட்டத்தில் ஏகமனதாக தீர்மாணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| For சிங்கார.ரத்தின சபாபதி<br>பொதுச் செயலாளர்<br>மின் கழக தொ.மு.ச<br>ஒருங்கிணைப்பாளர் / NCCOEEE | எஸ்.எஸ்.சுப்பிரமணியன்<br>பொருளாளர் / இந்திய<br>மின் ஊழியர் கூட்டமைப்பு<br>ஒருங்கிணைப்பாளர் / NCCOEEE |

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் | TNEB கணக்காயர் களத் தொழிலாளர் ~~சம்மேளனம்~~ சங்கம் | தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு |
| தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம் | TNEB ஐ.என்.டி.யு.சி (சேவியர்) | TNEB ஐ.என்.டி.யு.சி (சுவர்ணராஜ்) | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் |
| தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் | TNEB தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகம் | TNEB நிதி மற்றும் கணக்கு அலுவலர்கள் சங்கம் |
| TNEB கார்டு பில்லிங் யூனியன் | TNEB அம்பேத்கார் தொழிலாளர் யூனியன் | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன் | TNEB எம்பளாயீஸ் பெடரேஷன் |